தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள்

உயர்திரு. A. C. முத்தையா அவர்கள்

குழந்தை கவிஞர் பால சாகித்ய புரஷ்கார் திரு. செல்ல கணபதி அவர்கள்

திரு.P. வேதகிரி அவர்கள்

மித்ராவயல் பஞ்சாயத்து தலைவர் திரு P. வெள்ளைசாமி அவர்கள்

O.A. குடும்பத்தினர்

சிறப்பு விருந்தினர்கள்

ACMMF மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள்

மித்ராவயல் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள்

பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சி நிருபர்கள்

பெரியோர்கள் மற்றும் தாய்மார்கள்

உங்கள் அனைவருக்கும் என் இனிய காலை வணக்கம்.

O.A.O.K.Rm குடும்பத்தினர், மற்றும் த அருண் பப்ளிக் சாரிடபுள் ட்ரஸ்ட்ஸ் அறங்காவலர்கள் சார்பாக, உங்கள் அனைவரையும் O.A.O.K.Rm அருணாசலம் செட்டியார் மருத்துவ கட்டிட திறப்பு விழா மற்றும் A.C.முத்தையா முதன்மை சுகாதார மைய திறப்பு விழாவிற்கு வரவேற்பதில் மிக்க மகிழ்ச்சி.

உங்களில் சிலருக்கு நானும் எனது குடும்பத்தினரும் பள்ளத்தூரை சேர்ந்தவர்கள் என்று தெரிந்து இருக்கலாம். அவ்வாறு, பள்ளத்தூரை சேர்ந்த நாங்கள் எதற்காக மித்ராவயல் கிராமத்தில் ஒரு மருத்துவ கட்டிடம் அமைக்க வேண்டும் என்று நீங்கள் யோசித்து இருக்கலாம்.

எங்கள் முன்னோர்கள் மித்ராவயலில் வாழ்ந்தவர்கள். சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு, இங்கிருந்து பள்ளத்தூருக்கு வசிக்க சென்றனர்.

இந்த கிராமத்தில் இருந்து வெகு தூரத்தில் இருந்தாலும், நானும் எனது குடும்பத்தினரும் மித்ராவயல் வருவதை சுமார் 15 ஆண்டுகளாக கடைப்பிடித்து வருகிறோம். எங்கள் முன்னோர்கள் வாழ்ந்த இந்த மித்ராவயல் மண்ணிற்கு வருவதை நாங்கள் பெருமையாக நினைக்கிறோம்.

நம் பாரம்பரியம் என்பது நம் அனைவருக்கும் முக்கியமானது. நம்முடைய பாரம்பரியத்தையும், தாய் மண்ணையும் மறக்காமல், நாம் பிறந்த மண்ணிற்கு நன்றி சொல்வதுபோல இங்குள்ள மக்களின் சமுதாய வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

இந்த கிராமத்திற்கு சமுதாய பணிகள் செய்வதை என் கடமையாக நினைத்தேன். இதற்காக பல திட்டங்களையும், வழிகளையும் நீண்ட காலமாக யோசித்து வந்தேன். அவ்வாறு யோசித்தபோது என்னுடைய மாமனார் உயர்திரு. A. C. முத்தையா அவர்களின் வழியாக ஒரு தீர்வு கிடைத்தது.

சிவகங்கை மாவட்டத்தில் பல கிராமங்களில் அமைக்கப்பட்ட A. C. முத்தையா முதன்மை சுகாதார மையம், அங்கு இருக்கும் மக்களுக்கு சிறந்த முறையில் சேவைகள் செய்து வருகிறது. இதை மனதில் கொண்டு, நானும் மித்ராவயலில் இதுபோன்ற மருத்துவ சேவை செய்ய, ஒரு கட்டிடம் அமைக்க முடிவு செய்தேன்.

மருத்துவ கட்டிடம் அமைக்க பல இடங்களை தேர்வு செய்தேன். ஆனால், அந்த இடங்கள் மக்கள் வந்து செல்ல வசதியாக இல்லை. இரண்டாண்டு கால முயற்சிக்கு பின்னால், இந்த நிலத்தை வாங்கிய பலன், நம் முன்னே இருக்கும் இந்த மருத்துவ கட்டிடம். இங்கு இது அமைந்து இருப்பது தனித்தன்மையானது, உணர்வுபூர்வமானது

எங்கள் முன்னோர்கள் வசித்த இந்த கிராமத்திற்கு ஒரு சமுதாய நலன் செய்வதன் மூலம் நானும் எனது குடும்பத்தினரும் மன நிறைவு அடைகிறோம். என் முன்னோர்கள் மீது எனக்குள்ள மரியாதை காரணமாக, எனது பாட்டனார் நினைவில், இக்கட்டிடத்திற்கு அவருடைய பெயரை சூட்டினேன்

இந்த மருத்துவ மையமானது மக்களுக்கு இலவச மருத்துவ சேவையோடு சமூக நலனை அறிய செய்வதையும் குறிக்கோளாக கொண்டுள்ளது.

தங்களின் குழந்தை பிறப்பு, அவர்களின் நலன், பெண்கள் நலன் மற்றும் அனைத்து மருத்துவ தேவைகளுக்கும், உங்களுக்காக O.A.O.K.Rm அருணாசலம் செட்டியார் மருத்துவ கட்டிடம் உள்ளது.

இக்கட்டிடம், தங்களுக்காக O.A.O.K.Rm குடும்பத்தாரின் அர்ப்பணிப்பு.

நமது தேச தந்தை காந்தியடிகள், 'இந்த உலகத்தில் எந்த மாற்றத்தை நீ விரும்புகிறையோ, அந்த மாற்றமாக நீ இரு' என்று கூறியிருக்கிறார். இந்த வாக்கியத்தை, நானும், எனது குடும்பத்தினரும் கடைப்பிடித்து வருகின்றோம். நல்ல ஒரு உலகத்தை காண வேண்டும், அதற்காக நல்லவற்றை செய்ய வேண்டும், இதன் மூலம் படிப்படியாக மாற்றம் வரும் என நான் நாம்புகிறேன்.

எங்களுடனும், எங்கள் குறிக்கோளுடனும், இந்த முதன்மை சுகாதார மையம் அனைவருக்கும் பயன் பெறும் வகையில் செயல்பட ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மருத்துவ மையத்தை நல்ல முறையில் பராமரிப்பதன் மூலம் நம் மித்ராவயல் மக்கள் மட்டுமல்லாது, நம்மை சுற்றி இருப்பவர்களும் பயன் பெறுவார்கள்.

மித்ராவயல் மற்றும் சுற்றுப்புற கிராம மக்களுக்கு தேவையான மருத்துவ உதவிகளை இம்மையம் பூர்த்தி செய்யும். நல்ல சூழலை உருவாக்குவதன் வழியாக, இச்சேவை வருங்கால தலைமுறையினருக்கும் சென்றடையும்.

இங்குள்ள மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும் என்னுடைய நல்வாழ்த்துக்கள்.

நீங்கள் அனைவரும் இன்று, இங்கு வந்து பங்கேற்றது O.A.O.K.Rm குடும்பத்தினருக்கும் மற்றும் த அருண் பப்ளிக் சாரிடபுள் ட்ரஸ்ட்ஸ் அறங்காவலர்களுக்கும் மகிழ்ச்சியை தருகிறது.

என் உரையை முடிப்பதற்கு முன், இவ்வுரையை தயார் செய்ய, என் மகள், செல்வி. விலாசினி மீனாட்சி உதவி செய்தார் என்பதை குறிப்பிட விரும்புகிறேன். அனைவருக்கும் என் நல் வாழ்த்துக்கள். வணக்கம்.